# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,780 — 1959 ජූනි 22 වැනි සඳුද — 22.6.1959

11,780 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

விலைக்கட்டளை நம்பர் கே. டி. 72. — அரிசி (மொத்த விற்பனையும் சில்லறை விற்பனையும்).

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நுவரெலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அலன் பேசில் சாமுவேல் நேசராஜா புள்ளைநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு மாசி மாதம் 13 ந் திகதி, வெளிவந்த இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு மாசி மாதம் 10 ந் திகதி, நம்பர் கே. டி. 70 ல் அரிசிக்கு நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளை 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதியோடு எடுத்துவிடுகிறேன் ;

(2) இத்துடனிருக்கும் முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 2 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய மொத்த விற்பனை விலைகளுக்கு மேல் முதல் அரைவாசி அளவு அரிசியில் வழங்கப்படும் நிகர அந்தர் ஒன்றை 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதியிலிருந்து விற்கப்படாதென நியமிக்கிறேன் ;

(3) இத்துடனிருக்கும் முதலாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 3 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலைகளுக்குமேல் இரண்டாவது அரைவாசி அளவு அரிசியில் வழங்கப்படும் நிகர அந்தர் ஒன்றை 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதியிலிருந்து விற்கப்படாதென நியமிக்கிறேன் ;

(4) இத்துடனிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 2 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய சில்லறை விலைகளுக்குமேல் முதல் அரைவாசி அளவு அரிசியில் நிகர இருத்தல் ஒன்றை 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ம் திகதியிலிருந்து விற்கப்படாதென நியமிக்கிறேன் ;

(5) இத்துடனிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 3 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய சில்லறை விலைகளுக்கு மேல் இரண்டாம் அரைவாசி அளவு அரிசியில் நிகர இருத்தல் ஒன்றை 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதியிலிருந்து விற்கப்படாதென நியமிக்கிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எந்தத் தொகையான அரிசியையாவது திரும்ப விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) எந்தத் தொகையான அரிசியையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப் படும் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய அரிசியை மொத்தமாக விற்கப்படின் இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணிக்கவேண்டுமென நியமிக்கிறேன் ;

(ஈ) முதல் அரைவாசி அளவு அரிசி முழுவதையும் கொடுக்கும்வரை இரண்டாம் அரைவாசி அரிசியைக் கொடுக்கப்படாதென நியமிக்கிறேன் ;

(உ) " அளவு " என்றால் உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வாங்குபவருக்குக் கொடுக்கப்படும் அரிசியின் அளவாகும் ;

(ஊ) " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென நியமிக்கிறேன் ;

(7) அரிசியை வேறொரு பொருளோடு கலந்து ஆகக்கூடிய விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் விற்கப்படாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலை நியமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தம்வசத்தில் அல்லது தம் கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது அரிசியை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடுதலான விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டும் ;

(9) இக்கட்டளையால் ஆகக் கூடுதலான விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் அரிசியை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கும் ஒவ்வொருவரும் அரிசியை வாங்குவோர் கேட்குமிடத்து பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அளவு ;

(இ) விற்ற அரிசிகளைச் செலுத்தப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா, அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(10) இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடுதலான விலைகளில் அவ்வாறு விற்கப்படும் அரிசியை சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு ஆனி மாதம் 15 ந் திகதி, பிற்பகல் 3.05 மணிக்குக் கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எஸ். என். புள்ளைநாயகம்,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கண்டி மாவட்டமும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவா
ஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியும்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>முதலாவது அளவு அரிசி நிகர அந்தர் ஒன்றுக்கு வழங்கப்படும் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>இரண்டாவது அளவு அரிசி நிகர அந்தர் ஒன்றுக்கு வழங்கப்படும் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| எ.—கண்டிப் பகுதி— | | |
| (1) கண்டிப் பட்டணமும் கங்கவிட்ட கோரளையும் | 13 87 | 5 7 |
| **உடுநுவர யடிநுவர** | | |
| (2) கட்டுவியத்தை | 13 88 | 25 8 |
| (3) கெலிஓய | 13 97 | 25 17 |
| (4) பிடுனுகம, தந்துரை, மெனிக் திவலை, தவுளகள | 14 1 | 25 21 |
| (5) வேகிரிய, முறுதலாவை | 13 99 | 25 19 |
| (6) வட்டப்பொள | 14 11 | 25 31 |
| (7) கடுகண்ணுவை | 13 88 | 25 8 |
| (8) ஈரியகாமம், பேராதனை | 13 89 | 25 9 |
| (9) பத்கொடபிடிய | 14 6 | 25 26 |
| (10) பொத்தபிடிய | 14 1 | 25 21 |
| (11) அளகொளங்கை | 13 93 | 25 13 |
| **தும்பனை** | | |
| (12) கலகெதிரை | 14 24 | 25 44 |
| (13) ஹதரலியத்தை | 14 7 | 25 27 |
| **ஹாரிஸ்பத்து** | | |
| (14) அரம்பகடை, பூஜாபிட்டி, குறுகொட | 14 11 | 25 31 |
| (15) ஹாதெனிய, குளுகம்மனை, விகுஹும்பலை, வெரல்லகம, அக்குறனை | 14 6 | 25 26 |
| (16) பரிகம | 14 1 | 25 21 |
| (17) யட்டிவாவலை | 13 97 | 25 17 |
| (18) வெலேகடை | 14 1 | 25 21 |
| (19) பலிபான | 14 21 | 25 41 |
| (20) அளவத்துகொடை | 14 19 | 25 39 |
| (21) கல்ஹின்னை, அங்கும்புற | 14 50 | 25 70 |
| **பாத்ததும்பறை** | | |
| (22) வத்துகாமம் | 14 1 | 25 21 |
| (23) தெல்தெனிய | 14 31 | 25 51 |
| (24) பன்விலை | 14 23 | 25 43 |
| (25) மடவலை | 14 10 | 25 30 |
| (26) நவயாளதன்னை, கட்டுகாஸ்தோட்டை | 13 89 | 25 9 |
| (27) பறனகம | 14 29 | 25 49 |
| (28) உழுகங்கை | 14 45 | 25 65 |
| (29) கெங்காலை | 14 36 | 25 56 |
| (30) திகனை | 14 27 | 25 47 |
| (31) அம்பதன்னை | 13 97 | 25 17 |
| (32) மெனிக்கின்னை | 14 20 | 25 40 |
| **உடதும்பறை** | | |
| (33) உடிஸ்பத்து | 14 32 | 25 52 |
| (34) ஊறுகலை | 14 46 | 25 66 |
| (35) உன்னுஸ்கிரி | 14 59 | 25 79 |
| (36) மொரகஹமுள | 14 43 | 25 63 |
| **பாத்தஹேவாஹெட்ட** | | |
| (37) மாரஸ்சனை | 14 41 | 25 61 |
| (38) பட்டிகாமம் பசார் | 14 53 | 25 73 |
| (39) தலாத்துஓய | 14 20 | 25 40 |
| (40) கலகா | 14 36 | 25 56 |
| (41) அம்பிட்டிய | 14 15 | 25 35 |
| **உடபளாத்தை** | | |
| (42) கம்பலை | 13 84 | 25 4 |
| (43) உளபனை | 14 8 | 25 28 |
| (44) புசல்லாவை | 14 32 | 25 52 |
| (45) உடுவலை | 14 63 | 25 83 |
| (46) கமுகமுவ | 14 15 | 25 35 |
| (47) முள்கம | 14 50 | 25 70 |
| **உடபுளத்கம** | | |
| (48) நாவலப்பிட்டி | 14 10 | 25 30 |
| (49) ஹட்டன் | 14 27 | 25 47 |
| (50) நோர்வூட் | 14 48 | 25 68 |
| (51) போகவந்தளாவை | 14 83 | 26 03 |
| (52) கினிகத்தேனை | 14 57 | 25 77 |
| (53) மஸ்கெலியா, அக்கரவத்தை, நோட்டன் பிறிஜ் (ஹன்டன்னுயிஸ்) | 14 81 | 26 1 |

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>முதலாவது அளவு அரிசி நிகர அந். ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>இரண்டாவது அளவு அரிசி நிகர அந். ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச |
|---|---|---|
| **பி.—நுவரேலியாப் பகுதியின் உடஹேவாஹெட்டப் பிரிவு—** | | |
| (54) பதியபலல்லை | 14 67 | 25 87 |
| (55) மதுரட்ட | 14 95 | 26 15 |
| (56) மனக்கொல | 14 67 | 25 87 |
| (57) றிகில்ல கஸ்கடை | 14 57 | 25 77 |
| (58) றகதுங்கொட | 14 64 | 25 84 |
| (59) ஹங்குரன்கெத்த | 14 46 | 25 66 |
| (60) முதுன்பிட்டிய | 14 67 | 25 87 |
| (61) கறள்ளியத்தை | 14 78 | 25 98 |

## இரண்டாவது அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>முதலாவது அளவு அரிசி நிகர இரு. ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>சதம் | பத்தி 3<br>இரண்டாவது அளவு அரிசி நிக இரு. ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>சதம் |
|---|---|---|
| **எ.—கண்டிப் பகுதி—** | | |
| (1) கண்டிப்பட்டணமும் கங்கவட்டக் கோறளையும் | 13 | 23 |
| **உடுநுவர யடிநுவர** | | |
| (2) கம்புராதெனிய, கெலியல்பிட்டி, குருகுத்தளை | 13½ | 23½ |
| (3) ஆண்டியாதென்னை தோட்டம் | 13½ | 23½ |
| (4) உடுநுவர யடிநுவர பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 13 | 23 |
| **தும்பணை** | | |
| (5) களகெதிரை, களகெதிரைமடிகே | 13 | 23 |
| (6) வாத்தாவ, மினிகமுவ, கூரகம, ஹத்தாபிட்டிய, பொள்வத்தைபெலான, ரங்கமுவ, குணதாஹா, உடுவ, கள்தொள | 13½ | 23½ |
| (7) தும்பணைப் பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 13½ | 23½ |
| **ஹாரிஸ்பத்துவ** | | |
| (8) நியாங்கொட, பெரகம, வள்கம, மெதவளை, மறவணுகொடை, குருந்துகொள்ளை, பரிகம, வெரல்லகம, குளுகம்மன, யடிவாவளை, கொண்டதெனிய, கஹவத்தை, பளிபான, முள்ளேகம, அக்குறணை, கும்புறேகம, உகுரஸ்ஸபிடி, அளகொட, மாவதபொள, தொரணகம, ஹடிகொட, புளுகொஹோ தன்ணே, ஒவிஸ்ஸ, படுகொட, ஜீவனவத்தை, போதொட | 13 | 23 |
| (9) ஹாரிஸ்பத்துவை பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 13½ | 23½ |
| **பாத்ததும்பறை** | | |
| (10) வத்துகாமம், யடிருவன, பள்ளேகம, மனிக்கின்னே, நவயாலத்தன்னே, பன்விலை, பிடியேகெதர, மடவளைமடிகே, நாபான | 13 | 23 |
| (11) உடுருவன, யட்டவர, ஹுரிகடுவ, குண்டசாலை, மகவத்தை, மடுல்கொல்லை, வளள, மீகம்மன, ஹுரி கடுவமடிகே, அத்தரகல்ல உடகம, அரத்தனே உடகம, அத்தரகல்ல பள்ளேகம, அரத்தனே பள்ளே கம, பள்ளேகம, பீலவள, குண்ணுபாள, தொரகமுவ, தெல்தெனிய பட்டணம், தெல்தெனிய கிராமம், வவகம, கரள்ளியத்தை, கும்புக்கந்துற, ரம்புக்வெல்ல, அமுனுகம, சிரிமல்வத்தை, ஹுளுகங்கை, பத்தேகம, கெங்கள்ள | 13½ | 23½ |
| (12) நத்தரன்பொத, நாரண்பணுவ, தம்பராவ, உடுகொட, இத்தாவ, கொமகொட, தோணவலை, கும்புள் ளொலுவ | 13½ | 23½ |
| (13) வேரபிடிய, கொஸ்கம, வடபான, மஹவுஸ்ஸா, கள்பொடவத்தை | 14 | 24 |
| (14) வேந்தருவ | 14½ | 24½ |
| (15) பாததும்பறை பகுதியின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 14 | 24 |
| **உடதும்பறை** | | |
| (16) உடிஸ்பத்து பட்டணம், கப்பாளை பள்ளேகம, கூப்பாளை உடகம, பொற்றல்கொட, போமுறே, வத்து லியத்தை, நுகதன்னே | 13½ | 23½ |
| (17) வேரகம | 14 | 24 |
| (18) அம்பாலே, துனுவில, கங்கொட, ஹாளியல, தளகுண, மகவெல, உடவெல, பள்ளேவெல | 13½ | 23½ |
| (19) மீமுரவசம | 15½ | 25½ |
| (20) உடத்தாவ, மடுகள்ள | 14½ | 24½ |
| (21) உடதும்பறை பகுதியின் மற்ற ஏல்லா இடங்களுக்கும் | 14 | 24 |
| **பாத்தஹேவாஹெட்ட** | | |
| (22) நெகினிவெல | 13½ | 23½ |
| (23) அம்பிட்டி பள்ளேகம, கிப்பொள, கொஸ்ஹின்ன, கெடவள, அம்பிடி உடகம | 13 | 23 |
| (24) கலஹா, தெல்தொட, நுகலியத்தை, குருதெனிய, பூடாவத்தை, கொடமுன்ன, ஹபுதளை-பள்ளேகம, ஹபுதளை உடகம, தூள்முற கபுலியத்த, தன்னகும்புற, மாரஸ்ஸன, கந்தேவள | 13½ | 23½ |
| (25) பட்டியகம, உடபிடிய, வனகபுவ, மஹமதகம, உடுவெவ | 14 | 24 |
| (26) போபிட்டிய களவிடிதன்னே | 14 | 24 |
| (27) அதுள்கம, ஹேவாவிஸ்ஸ | 14½ | 24½ |
| (28) பாதஹேவாஹெட்டப் பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்குழ் | 13½ | 23½ |

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>முதலாவது அளவு அரிசி நிகர இரு. ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>சதம் | பத்தி 3<br>இரண்டாவது அளவு அரிசி நிக இரு. ஒன்றுக்கு வழங்கப் படும் ஆகக்கூடிய சில்லறை. விலை.<br>சதம் |
|---|---|---|
| **உடபளாத்தை** | | |
| (29) கம்பளை, உளபனே, அடபாக, பள்ளேகம, களத்த, போவள, நாரன்விட, கிரிந்த, வள்ளஹகொட, தெல்பிடிய, இங்குருவத்தை, அட்டபாகே பஜார், கம்பளைவெல, ரத்மல்கடுவ, அங்கும்மன, கஹட்ட பிடிய, குடமகே, ஹெரகொள, மாவதுர, லேகுந்தெனிய, கிராஉள்ள, புபுரஸ்ஸ, யடபான, பள்ளே பிடிய, பன்விலதென்னே, களுகொமுவ, உடஹேந்தன்னே | 13 | 23 |
| (30) அடபாகே இஹலகம | 14½ | 24½ |
| (31) அடபாகே உடகம | 13½ | 23½ |
| (32) துணுகேவில | 14 | 24 |
| (33) தொளுவ, அலுகொள்ள, ஹிந்தகள, நியனகொள்ள, புஸ்ஸல்லாவ, படிதளாவ | 13½ | 23½ |
| (34) உடுவெல்ல | 14 | 24 |
| (35) உடபளாத்த பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 13½ | 23½ |
| **உடபுளத்கம** | | |
| (36) நாவளப்பிட்டி, பெனிதுவெ, மீபிடிய, காஹன்துங்கள, பவ்வாகம | 13 | 23 |
| (37) ரம்புக்பிட்டிய, பள்ளேகம, கடியன்லேன, தெகிந்த, நோர்வூட், ஹட்டன்–டிக்கோயா, ரொஸல்ல, கார்பாக்ஸ், பரூட்கில், வெலிகம்பளை | 13½ | 23½ |
| (38) கினிகத்ஹேன, கடவெல, மஸ்கெலிய, நோட்டன் பிரிட்ஜ், (ஹார்டன் ஹுயிஸ்), வடவெல, அம்பகமுவ யடிகங்ஹுளா வடக்கு, யடிகங்ஹுளா தெற்கு, களுகள, பொள்பிட்டிய, ஹோமாகம | 13½ | 23½ |
| (39) அக்கரவத்தை | 14 | 24 |
| (40) இன்டயர் பஜார் (இன்டயர் கிராமம்) | 14 | 24 |
| (41) தியன்சின் | 14 | 24 |
| (42) அப்கட், இிரிவன்எலிய, பத்தன, களவெல்தெனிய, பொகவந்தலாவ | 14 | 24 |
| (43) ஹங்குராபிட்டிய | 15½ | 25½ |
| (44) உடபுளத்கம பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 14½ | 24½ |
| **பி.—நுவரெலியாப் பகுதியின் உடஹேவாஹெட்ட பிரிவு—** | | |
| (45) ரிகில்ல கஸ்கட, ஹங்குரன்கெத, மாஒய, மாதன்வள | 13½ | 23½ |
| (46) புதியபலல்ல, கஹடகந்த, அலபலதன்னே, யடிவெல்ல, முன்வத்த, உடபதியபலல்ல, வெல்லகிரிய, இதம்பிடிய, மெடிபெமியே, மானகொல, தும்பாலஹபுவ, தெனிகே, களுகே, வில்வள, அல்கம, தெனிபே, பொரமதுள்ள, எகிரிய, ஹபுகஸ்தெனிய, வலுகம, தொடங்கும்புர, கட்டுகஸ்ஹின்ன, உனன்தன்ன, முதுனபிடிய, களஉட, உடகம, கரள்ளியத்த, இடமேலந்த, படகொள்ள, ரகதுங்கொட | 14 | 24 |
| (47) எகலகஸ்தன்ன, உனகொள்ள, உடவெல, மதுரட, துனுகேபத்த, கெடயாபதன, இல்லகொள்ள, உடவத்த, பம்பரகம | 14 | 24 |
| (48) வெடகேபொத | 14½ | 24½ |
| (49) உடஹேவாஹெட்ட பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 14½ | 24½ |

**குறிப்பு.—(i)** இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட அரிசியை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளா கும். இவ்விலைகளுக்கு மேலாக அரிசியை விற்கலாகாது.

**(ii)** ஒரு நிகர அந்தருக்குக் கூடுதலான அல்லது குறைவான எத்தொகையான அரிசியையும் மொத்த விற்பனையாக விற்குமிடத்து அதற்குக் கொடுக்கக்கூடிய கூடின விலையை மேலே சொல்லப்பட்ட ஒரு நிகர அந்தர் அரிசியின் மொத்த விற்பனை விலையிலிருந்து கணிக்கவேண்டும்.

---

உணவு விலைக் கட்டளை இலக்கம் ஜே/13/1959 — **உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு, மாசிக்கருவாடு)**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்குமிடத்து, எனக் களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), யாழ்ப்பாண மாவட்டம் செல்லையா நிற்குணனந்தன் ஆகிய யான் இக்கட்டளையால் —

(1) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை யில், 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட ஜே/7/58 இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில் அக்கட்டளையின் கீழ் காணப்படும் 1 ம், 2 ம் அட்டவணைகளில் முறையே 2 ம், 3 ம் பந்தி களில் காணப்படும் விலைகளையும், முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள மைசூர்ப் பருப்பையும் மாசிக்கருவாட்டையும் கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்கு அவ்வப் பொருட்களின் நேரே 2 ம், 3 ம் பந்திகளில் குறிக்கப்பட்டிருக்கும், விலைகள், முறையே மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக அமுலில் இருக்குமென்றும், இந்த விலைகளுக்குக் கூடுதலாக அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்ட பொருட்களை யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகர சபை எல்லை உட்பட), விற்பனை செய்யக்கூடாது ;

(3) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் பொருட்களுக்கு முறையே மொத்த அந்தர் ஒன்றிற்கு ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றிற்கு ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகரசபை எல்லையும் உட்பட) இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் விலைகளுடன் இரண்டாம் அட்டவணையில் 2 ம், 3 ம் பந்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் தொகைகளைக் காட்ட, முறையே மொத்த அந்தர் ஒன்றிற்கு ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றிற்கு ஆக்க்கூடிய சில்லறை விலையாகவும் இவ்விலைகளுக்குக் கூடுதலாக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட் டிருக்கும் காரியாதிகாரிகளின் எல்லைக்குள் விற்பனை செய்யக்கூடாது ;

(4) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக் கொண்ட 11,525 ம் இலக்க விசேட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதி பிரசுரமான உபஉணவுப் பொருட்களைக் குறிக்கும் 4 ம் பந்தியிலிருந்து 9 ம் பந்திவரையுள்ள இலக்கம் ஜே/7/1958ஐக் கொண்ட விலைக் கட்டளையுடன், இத்துடன் கீழ்க்காணும் முதலாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பொருட்களைக் குறிக்கும் அப்பந்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் திகதி பிற்பகல் 2.43 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கைச்சாத்திடப்பட்டது.

செ. நிற்குணானந்தன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
யாழ்ப்பாண மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| 1 ம் பந்தி விபரம் | 2 ம் பந்தி மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலை | 3 ம் பந்தி நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. மைசூர்ப்பருப்பு .. .. | 51 85 .. | 0 51 |
| 2. மாசி .. .. | 213 85 .. | 2 13 |

## இரண்டாம் அட்டவணை

| 1 ம் பந்தி | 2 ம் பந்தி யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகர சபை உட்பட) மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையிலும் பார்க்க கூடிய தொகை | 3 ம் பந்தி யாழ்ப்பாணக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகர சபை உட்பட) சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையிலும் பார்க்க கூடிய தொகை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. வலிகாமம் மேற்கு காரியாதிகாரியின் எல்லை, வலிகாமம் வடக்குக் காரியாதிகாரியின் எல்லை, வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரியின் எல்லை, தென்மராட்சிக் காரியாதிகாரியின் எல்லை, தீவுப் பகுதிக் காரியாதிகாரியின் எல்லைக்குள் வரும் ஊர்காவற்றுறைப் பட்டினச் சங்க எல்லையும், காரைதீவு எல்லையும் உட்பட .. | 0 50 .. | 0 01 |
| 2. தீவுப் பகுதிக் காரியாதிகாரியின் எல்லை (ஊர்காவற்றுறைப் பட்டின சங்க எல்லையும் காரைதீவு எல்லையும்) பிறநீங்கலாக .. | 0 70 .. | 0 01 |
| 3. நெடுந்தீவுக் காரியாதிகாரியின் எல்லை .. .. | 0 90 .. | 0 01 |
| 4. பூனகரி துணுக்காய் காரியாதிகாரியின் எல்லைக்குள் பூனகரி உடையாரின் பகுதி .. .. .. | 0 90 .. | 0 01 |
| 5. பூனகரி துணுக்காய் காரியாதிகாரியின் எல்லைக்குள் பல்லவராயன் கட்டு உடையாரின் பகுதி .. .. | 1 10 .. | 0 01 |
| 6. பூனகரி துணுக்காய் காரியாதிகாரியின் எல்லைக்குள் துணுக்காய் உடையாரின் பகுதி .. .. .. | 1 30 .. | 0 01 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது